# எதிர்க்கட்சிகள் உதவியைக் கோருகிறது இந்தியாவின் புதிய சிறுபான்மை அரசு

இந்தியாவின் புதிய சிறுபான்மை அரசு இன்னும் சில தினங்களில் தனது பெரும்பான்மை வலுவைப் பாராளுமன்றத்தில்நிரூபிக்கவேண்டியுள்ளது. இதன்பொருட்டு பிரதமர் நரசிம்மராவ் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் நேற்றுப் பேச்சு வார்த்தை நடாத்தினார். எதிர்க்கட்சிகள் ஆதரவு மூலம் ●திரமான சிறுபான்மை அரசை அமைக்கலாம் என இந்திராகாங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. தேசிய முன்னணித் தலைவர் வி. பி சிங், பாரதிய ஜனதா தலைவர் எல். கே. அத்வானி, சமாஜ்வாதி ஜனதா தலைவர் சந்திரசேகர், கம்யூனிஸ் கட்சி, போவர்ட் புளோக் ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோரையும் பிரதமர் நரசிம்மராவ் நேற்றுச் சந்தித்து தனது அரசுக்கான ஆதரவைக்கோரினார். எதிர்க்கட்சிகளுடனான சந்திப்புக் குறித்துப் பின்னர் கருத்து வெளியிட்ட பிரதமர் நரசிம்மராவ் எதிர்க்கட்சிகள் சாதகமான பதிலைத் தமக்குத் தந்ததாக குறிப்பிட்டார். எதிர்க்கட்சிகள் — 4 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 211 பிரசோற்பத்தி ஆனி 13 ( 27- 06- 1991 ) வியாழன்

27-6-1991

# போராட்டத்தின் உறுதியிலேயே உலக ஆதரவு தங்கியுள்ளது

## பி.பி.ஸியின் பிரிவினை தொடர்பான விமர்சனம்

**பிரிவினை, சுயாட்சிகோரி உலக அரங்கில் நடைபெறும் சுதந்திரப் போராட்டங்களுக்கு அநேகமாக உலக நாடுகள் ஆதரவு தருவதில்லை. ஆனால் இந்த ஆதரவை உறுதியான போராட்டத்தின் மூலம் பெறுவதோடு உலகமக்களையும் தம்பக்கம் இழுக்கக் கூடிய நிலையும் ஏற்படலாம்.**

இவ்வாறு உலகில் பிரிவினைவாதம் தொடர்பாக பி. பி. ஸி நேற்று ஒலிபரப்பிய செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆசியாவைப் பொறுத்தவரையில் இப்பகுதியில் நடைபெறும் சுதந்திரம் கோரி போராடுபவர்களில் முக்கியமானோர் இந்தியாவில் சீக்கியரும், காஷ்மிரியர்களும், இலங்கைத் தீவில் அதன் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களுமாவர் என அச் செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் நடைபெறும் பிரிவினைப் போராட்டங்களுக்கு அவர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு வெளியார் உதவிகள் கிடைப்பதில்லை என்பது உண்மையே ஆனால் வெளியார் உதவி என்பது அப்போராட்டங்களில் இருக்கும் உறுதிப்பாட்டில் தங்கியுள்ளது

பிரிவினைப் போராட்டத்தில் அதில் ஈடுபடுபவர்கள் காட்டும் உறுதி வெளியார் உதவியை அவர்கள் பெறுவதற்கு வழிவகுக்கும் என்

→ 04 ஆம் பக்கம் பார்க்க

## முல்லை நகர்படையினர்மீது விடுத●லப்புலிகள் தாக்கு

முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் உள்ள இராணுவத்தினர் நேற்று சிலாவத்தை நோக்கி முன்னேற முயன்றனர்.

நேற்றுக்காலை 7 30 மணியளவில் வெளியேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் க●ம் தாக்குதலை நடத்தியதையடுத்து படையினர் பின்வாங்கி முகாமுக்குத் திரும்பினர்.

## தமிழகச் சட்டப் பேரவை 4 தொகுதிகளில் தேர்தல்

தமிழகச் சட்டப்பேரவைத் தொகுதிகளான காங்கேயன், சென்னைத் துறைமுக பகுதிகளில் மீண்டும் தேர்தல் நடை நடைபெறவுள்ளது.

பாகூர், காங்கேயன் தொகுதிகளில் போட்டியிட்ட முதமைச்சர் ஜெயலலிதா இரு தொகுதிகளில்தெரிவானதால் அவர் காங்கேயன் தொகுதியை விட்டு பாகூர் தொகு

→ 04 ஆம் பக்கம் பார்க்க

### சுகாதார அதிகாரி அறிவுறுத்தல்

## உணவுக் கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

சங்கானைப் பகுதியிலுள்ள தேநீர்க்கடைகள், உணவு விற்பனைநிலையங்கள்பேக்கறிகள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று சங்கானைப் பட்டின பொது சன நூலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் ரி. மகாதேவன் இக்கருத்தரங்கிற்குத்

→ 04 ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பு அமைச்சராக சரத்பவார் நியமனம்

பிரதமர் பதவிக்காக நரசிம்மராவுடன் போட்டியிட்ட சர்ச்சைக்குரியவரான சரத்பவார் பாதுகாப்பு அமைச்சராகியுள்ளார்.

இவர் நேற்றுத் தனது பதவியை ஜனாதிபதி முன்னிலையில் ஏற்றுக் கொண்டார். இவருடன் பதவியேற்பன்று கலந்து கொள்ளாத வேறு இரு இணையமைச்சர்களும்

→ 04 ஆம் பக்கம் பார்க்க

## எம்பிலிப்பிட்டியவில் ஜே. வி. பியினர் கைது

எம்பிலிப்பிட்டிய பொலி● பிரிவில் அறுபத்திரண்டு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயங்கரக் குற்றச் செயல்களில் தொடர்புடையவர்கள் எனத்தெரிவிக்கப் படுகிறது.

இவர்களில் அதிகமானோர் ஜே. வி. பி யுடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

வல●முல்லை, மித்தெனிய, பெலியத்தை, வீரகெட்டிய, ஆகியபகுதிகளில் இடம்பெற்ற ஜே. வி. பி நடவடிக்கைகளு

→ 04 ஆம் பக்கம் பார்க்க

## சமஷ்டிதவறினால்தமிழீழம் என்கிறார் சுவாமி

முன்னாள் இந்தியச் சட்ட அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி இலங்கையில் ஒரு சமஷ்டி ஆட்சி உருவாக்கப்பட்● தமிழர்பிரச்சினையைத் தீர்க்கவேண்●மெனக் கூறினார்.

இலங்கை அரசு இதற்கு ஒத்துவராவிட்டால் இந்திய அரசு இலங்கையில் சமஷ்டி முறையை அமுல்ப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

சமஷ்டி ஆட்சி முறை இலங்கையி● அமைக்கத் தவறும்

→ 04 ஆம் பக்கம் பார்க்க

### க. பொ, த. விசேட பரீட்சை

## 29ஆம் திகதி முதல் திருத்த வேலை ஆரம்பம்

க பொ. த. உயர்தர 1990 ஆண்டு விசேட பரீட்சை வினாத்தாள்களின் திருத்த வேலைகள் இம்மாதம் 29 ஆம் திகதி முதல் கொழும்பில் ஆரம்பமாகவுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ் வினாத்தாள் திருத்த வேலைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து பரீட்சைத் திணைக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஏழாலை நோக்கி ஷெல் மூவர் படுகாயம்

நேற்று மாலை 5 மணியளவில் ஏழாலை தெற்குப் பகுதியை நோக்கி பலாலியில் இருந்து படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதில் மூவர் படுகாயமடைந்தனர். ஒரு வீட்டு வளவில் மூன்று ஷெல்களும் வீழ்ந்து வெடித்தன

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

தம்பலகாமம் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி இரவு நடந்த மோதலின் போது சுரேன் (திருமலை), லோஜன் (திருமலை) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

## தொடர்ந்து பணிபுரியுமாறு உதவிப் பணிப்பாளருக்கு உத்தரவு

யாழ் கோட்டக்கல்வி உதவிப் பணிப்பாளராக முன்னர் கடமையாற்றிய எஸ். வேலாயுதம் மீண்டும் அப்பதவியைப் பொறுப்பேற்கவுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித்துறை கோட்டக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்த பொ. வீரபத்திரன் இவரது இடத்துக்கு வடகிழக்கு மாகாணகல்வி அமைச்சின் செயலாளரினால் அண்மையில் நியமனம் செய்யப்பட்டது தெரிந்ததே.

ஆனால் அண்மையில் கொழும்பு கல்வி அமைச்சுக்கு சென்று திரும்பியுள்ள கல்விப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கிராம சேவையாளர் மீது பாதிக்கப்பட்டோர் புகார்

ஊர்காவற்றுறைப்பகுதியில் இருந்து வெளியேறிய குடும்பங்களுக்கு வழங்கப்படவேண்டிய உலர் உணவு நிவாரணத்தை தமது உறவினர்களுக்கு வழங்கியதாக காரம்பன் பகுதிக் கிராம சேவகர் ஒருவர் மீது விடுதலைப்புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

பெயர்ப்பட்டியலில் உள்ள

→ 04 ஆம் பக்கம் பார்க்க

# நடைபாதையில் குண்டு வெடித்தது

## என்கிறார் அரச பகுப்பாய்வாளர்

வெள்ளியன்று கூட்டுப் படைத் தலைமையகக் குண்டு வெடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் தலைமையகக் கட்டிடங்களை நோக்கி நிறுத்தப்பட்டிருந்ததாகவும் நடைபாதையில் வாகனம் நிறுத்தப்பட்ட வேளையிலேயே குண்டு வெடித்ததாகவும் அரசாங்க பகுப்பாய்வாளர் ஏ. ஆர். எல். விஜசேகர தெரிவித்தார்.

குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட குழி 3 அடி ஆழமும் 11 அடி நீளமும்10 அடி அகலமும் உடையதாக இருந்தது எனினும் மார்ச் இரண்டாம் திகதி ரஞ்சன் விஜேரத்னவைப்பலியெடுத்த குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட குழியைப் போன்று அவ்வளவு பெரிதாக இல்லையென்றும் கொங்கிரீட்டினாலான நடைபாதையில் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததினால் தாக்கம் குறைவாக இருந்ததென்றும் அரசாங்கப் பகுப்பாய்வாளர் கூறுகிறார். 74

## உமி அடுப்பு உபயோகத்தால் விறகுத்தேவையை பூர்த்தி செய்வோம்

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பாரிய நெருக்குதலுக்கு முன்பு யாழ் குடாநாட்டு மக்களின் விறகுத் தேவை பெருமளவில் யாழ் குடாநாட்டுக்கு அப்பால் உள்ள காட்டுப் பிரதேசங்களில் இருந்து கொண்டு வந்த விறகின் மூலமே நிவர்த்தி செய்யப்பட்டது. ஆனால் இன்றைய போக்குவரத்துச் சீர்கேட்டினால் இப்பகுதி மக்கள் விறகுத் தேவைக்கு யாழ் குடா நாட்டில் உள்ள மரங்களையே உபயோகிக்க வேண்டிய நிலை தோன்றியுள்ள.

இதனால் விறகின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளமையும் விறகுக்கான தட்டுப்பாடும் காணப்படுகின்றது. யாழ் குடா நாட்டில் பல வருடங்களாக வளர்க்கப்பட்ட மரங்களையும், வேலிகளையும் விறகுத் தேவைக்காக தறிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மரத்திற்கும் பதிலாக ஒவ்வொரு மரமாவது அல்லது அதற்கு மேலாக மரங்களை நாட்டிக் கொள்வதால் இனி வரும் காலங்களிலாவது விறகுத்தேவையைப் பூர்த்தி செய்ய வழிகாண முடியும். சூழல் மாசடைவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். கால் நடைகளுக்குப் போதிய உணவை வழங்க முடியும். இலை, குழை மூலம் இயற்கைப் பசளைகளைச் சேகரிக்க முடியும்,மழைவீழ்ச்சியைஅதிகரிக்க முடியும், மண் அரிப்பைத் தவிர்க்கமுடியும். குளங்களில் வண்டல்மண் சேர்ந்து குளம் தாழ்ப்பம் குறைவது தவிர்க்க முடியும், தற்போது தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் விற்பனையாகும் உமி அடுப்பு உபயோகத்தின் மூலம் விறகுத் தேவையை தற்பொழுதே ஓரளவு ஏனும் குறைத்துக் கொள்ள முடியும்.

-தமிழீழ ஆய்வு நிறுவனம்

ஈச்சமோட்டை கலட்டிப்புலம்

அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான வருடாந்த உற்சவ

சிறப்புச் சொற்பொழிவுகள்

27.6.91 வியாழன்—
புலவர் ஈழத்துச் சிவானந்தன்
"வாழ்வும் வழிபாடும்"

28.6.91 வெள்ளி—
கவிஞர் சோ. பத்மநாதன்
"தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி..."

29.06.91 சனி—
கலாநிதி கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை
"வயிரவர் அவதாரம்"

30.06.91 ஞாயிறு—
கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர்
"அவதார தத்துவம்"

01.07.91 திங்கள்—
திரு.க.நாகேஸ்வரன் எம் ஏ.
"தெய்வம் உண்டா?"

02.07.91 செவ்வாய்—
திரு க.சொக்கலிங்கம் எம்.ஏ.
"செல்வனும் செல்வமும்"

03 07.91 புதன்—
கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை
"தொண்டர்தம் பெருமை"

04.07.91 வியாழன்—
வித்துவான் சி.குமாரசாமி பீ.ஏ.
"இந்துசமயம் காட்டும் வாழ்க்கை நெறி"

05 07.91 வெள்ளி—
கம்பன்கழக அமைப்பாளர் திரு.இ.ஜெயராஜ்
"அன்பே சிவம்"

06.07.91 சனி—
திரு த.சிவகுமாரன்
"அறிவினால் ஆவதுண்டோ"

ஆரம்பம் தினமும் மாலை 6.00 மணி

சைவப் பெருமக்கள் அனைவரும் வருக!

06090

மட்டுவில் வடக்கு

பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்

மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

30-06-91—ஞாயிறு—கர்மாரம்பம்
03-07-91—புதன்—தைலாப்பியங்கம்
04-07-91—வியாழன்—11.03—12.50 வரை
மஹா கும்பாபிஷேகம்

இக்காலங்களில் அம்பிகை அடியார்கள் அனைவரும் தவறாது வருகைதந்து அம்பிகையின் இஷ்டசித்திகளைப் பெற்று இனிது வாழ்வார்களாக.

— தர்மகர்த்தா சபையினர்

06089

## வருடாந்த பொங்கல்

அருள்மிகு வண்ணை சிவப்பிரகாசம் வீதியில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலய வருடாந்த பொங்கல் மடை நாளை வெள்ளிக்கிழமை மாலை2. 00 மணிக்கு மேற்படி ஆலயத்தில் விமரிசையாக நடைபெற உள்ளது.

## திருஇருதய சபைநிகழ்ச்சி

சில்லாலை திரு இருதய சபை நடாத்திவரும் வணக்க மாதத்தின் இறுதி நிகழ்ச்சி எதிர்வரும் 30-ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் நடைபெறவுள்ளது. சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு பொனிபொஸ் அடிகளார் பாடல் பூசையை நிறைவேற்றுவார். 13

## பிலிப்பைன்ஸ் நில நடுக்கம்

பிலிப்பைன்ஸ் தீவில் நேற்று முன்தினம் பினிற்றேமா எரிமலைக்கு அடுத்துள்ள பகுதிகளில் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதென வானொலிச் செய்திகள் தெரிவிக்கின்றன

இந்த நிலநடுக்கம் ஏற்பட்டபோது சுமார் பத்து கிலோ மீற்றர் உயரத்துக்குச் சாம்பல் பரவியதாகவும், அடுத்த மூன்று ஆண்டுகள் வரை இவ் எரிமலை சாம்பலை அள்ளி வீசி நிலநடுக்கத்தை ஏற்படுத்தக் கூடுமெனவும் விஞ்ஞானிகள்கருத்துவெளியிட்டுள்ளனர்

## செந்தமிழ் வளர்த்த பண்டிதமணி

செந்தமிழ் வளர்த்த மேலோன்
செழுங்கலை அறிந்த நூலோன்
சிந்தையில் தெய்வ பாதம்
திகழ்ந்திடச் சிறந்த நல்லோன்
சிந்தனை வல்லான் என்ற
சிறப்பினைப் பெற்ற சான்றோன்
பைந்தமிழ் வளர்த்த ஞானி
பண்டிதமணியாம் கற்றோன்

"சந்திரமௌலி"

(இன்று இலக்கிய கலாநிதி; பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் தொண்ணூற்று மூன்றாவது பிறந்த தினம்.)

## முத்தமிழ்விழா-முரசொலி நடத்தும் கட்டுரைப் போட்டி

### பரிசுகள் ரூபா 3000/-

தமிழீழம் இதுவரை கண்டிராத அளவில் ஒரு தேசிய விழாவாக முத்தமிழ் விழா இனிது நடந்துள்ளது. பத்து நாள்களாக அறுபது அரங்குகளில் நடந்த இப்பெரு விழாவில் இயல், இசை, நாடகத்துறைகள் சார்ந்த முந்நூறு கலைஞர்கள் கலந்து சிறப்பித்திருக்கிறார்கள். நிகழ்ச்சிகளை நான்குலட்சம் மக்கள் கண்டும், கேட்டும் களித்திருக்கிறார்கள்.

எமது கவிஞர்கள், சொற்பொழிவாளர்கள், கலைஞர்களுடைய திறமான புலமைகளைப் போற்றவும், இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் முரசொலி ஏற்பாடு செய்யும் இப்போட்டி வகை செய்யும்.

### போட்டி - 1 இயல்

உங்கள் உள்ளம் கவர்ந்த இயல் நிகழ்ச்சி (உரை நிகழ்ச்சி, கவியரங்கம், பட்டிமண்டபம், வழக்காடு மன்றம்) ஒன்றையோ, பலவற்றையோ மதிப்பீடு செய்து 500 சொற்களுக்கு மேற்படாமல் எழுதப்படும் விமர்சனங்களில் நடுவர் குழுவால் அதிசிறந்ததாகக் கருதப்படும் ஆக்கத்துக்கு

**முதற் பரிசாக ரூபா 500 உம்,**
**இரண்டாம் பரிசாக ரூபா 300 உம்,**
**மூன்றாம் பரிசாக ரூபா 200 உம்**

வழங்கப்படும்

### போட்டி - 2 இசை

உங்கள் மனம் நிறைந்த இசைநிகழ்ச்சி (மெல்லிசை, வாய்ப்பாட்டு, கர்நாடக இசை, வாத்திய இசை) ஒன்றையோ, பலவற்றையோ மதிப்பீடு செய்து 500 சொற்களுக்கு மேற்படாமல் எழுதப்படும் விமர்சனங்களில் நடுவர் குழுவால் அதிசிறந்ததாகக் கருதப்படும் ஆக்கத்துக்கு

**முதற் பரிசாக ரூபா 500 உம்,**
**இரண்டாம் பரிசாக ரூபா 300 உம்,**
**மூன்றாம் பரிசாக ரூபா 200 உம்**

வழங்கப்படும்.

### போட்டி - 3 நாடகம்

உங்கள் உள்ளம் கவர்ந்த நாடகம் (நாடகம், நாட்டிய நாடகம்) நிகழ்ச்சி ஒன்றையோ, பலவற்றையோ மதிப்பீடு செய்து 500 சொற்களுக்கு மேற்படாமல் எழுதப்படும் விமர்சனங்களில் நடுவர்குழுவால் அதிசிறந்ததாகக் கருதப்படும் ஆக்கத்துக்கு

**முதற் பரிசாக ரூபா 500 உம்,**
**இரண்டாம் பரிசாக ரூபா 300 உம்,**
**மூன்றாம் பரிசாக ரூபா 200 உம்**

வழங்கப்படும்.

விதிகள்:

1 கட்டுரைகள் 500 சொற்களுக்கு மேற்படாது இருப்பது விரும்பத்தக்கது.
2 போட்டியாளர்கள் தங்கள் சொந்தப் பெயரையும் முகவரியையும் தனியாக ஒருதாளில் எழுதித் தமது ஆக்கத்துடன் இணைக்க வேண்டும்.
3 எந்தப் போட்டியில் ஒருவர் பங்கு பற்றுகிறாரோ, முத்தமிழ் விழாவின் அந்தத் துறை சார்ந்த எந்த அரங்கிலும் அவர் பங்கு பற்றியிருக்கக் கூடாது. (உ+ம்) உரை நிகழ்ச்சியில் பங்கு பற்றியவர் 'இயல்' போட்டி பற்றி விமர்சனக் கட்டுரை எழுத முடியாது; ஆனால் நாடக விமர்சனம் செய்யலாம்.
4 கட்டுரைகள் 05-07-91 நண்பகலுக்கு முன் கல்வியங்காடு, டச்சு வீதியில் உள்ள முரசொலி அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அஞ்சல் மூலமோ, நேரிலோ சேர்ப்பிக்கப்படலாம். கடித உறையின் இடப்புற மேல் மூலையில் 'முத்தமிழ் விழா-போட்டி' என எழுதப்பட்டிருக்க வேண்டும்.
5 முரசொலி நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் இப்போட்டியில் பங்கு பற்ற முடியாது. கட்டுரைகள் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

— ஆசிரியர்

★ நினைவஞ்சலிக் கூட்டத்தில் கவிஞர் வாஞ்சிநாதன்

# "ஒரு தமிழ் மன்னனுக்காகத் தலைவணங்கிச் சென்றவர்கள் சிங்களவர்கள்"

**இரண்டாயிரத்து நாற்றுஐம்பது ஆண்டுகளுக்கு முன் இலங்கை முழுவதையும் ஒரே குடையின்கீழ் செங்கோல் தவறாமல் மிகச் சிறப்பாக ஆட்சி செய்தவன்தான் எல்லாளன் என்ற சோழத் தமிழ் அரசன். இவனது வீரம், விவேகம், பண்பு, சமநீதி என்பன தமிழர்களின் 'மரபுவழி' தவறாமல் அன்று கடைப்பிடிக்கப்பட்டு, வரலாற்றில் ஓர் தனி இடம் இவனுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.**

இன்று எம்மை இம்மண்ணின் அடிமைகள் என்று எண்ணி ஆட்சி செய்கிறது சிங்கள அரசு! ஆனால் எல்லாளன், அன்று இம்மண்ணில் வாழ்ந்த அனைத்து மக்களையும் சமமாக மதித்து நீதிநெறி தவறாமல் ஆட்சி செய்தான். அதனால் தான் இவன் இறந்த பின்னர், சிங்களவர்களும் தமிழர்களும், அவர்கள் அரசராக இருந்தாலும் கூட இவனது சமாதியின் முன் தலை குனிந்து மரியாதை செலுத்தி விட்டே சென்றனர். இந்த வழக்கம் இரண்டாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு மேலாக இம்மண்ணில் இருந்து வந்திருக்கிறது.

இவ்வாறு, அண்மையில் உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற,மேஜர் சலாமின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் கவிஞர் மு. வே. யோ.வாஞ்சிநாதன் குறிப்பிட்டார்.

''எல்லாளனால் தமிழர்கள் அன்று பெருமைப்பட்டனர். 2100 ஆண்டுகளுக்கு மேல் ஒரு தமிழரசனுக்காகத் தலை வணங்கிச் சென்ற சிங்களவர்கள், 1946ஆம் ஆண்டிலிருந்து திடீரென்று இம் மன்னனுக்குத் தலைவணங்குவதை நிறுத்தி விட்டனர் காரணம் சிங்களப் புதைபொருள் ஆராச்சியாளன் 'பரணவிதான' என்பவன், எல்லாளன் சமாதி அமைக்கப்பட்டிருக்கும் அனுராத புரத்தின் அந்தப் பிரதேசத்துக்குச் சென்று, புதிய ஆய்வொன்றை மேற்கொண்டமை.

சிங்களவர்களுக்கு இம் மண்ணை விட்டால் வேறு நாடில்லை என்ற காரணத்திற்காக இம்மண்ணில் வாழும் பாரம்பரிய, பூர்வீகத் தமிழர்களின் வரலாற்றை மூடி மறைத்து இம் மண்ணில் இருந்து தமிழர்களை விரட்டியடிக்க வேண்டுமென்ற ஒரு சதிக் கூட்டம், 1946 ஆம் ஆண்டிலேயே செயற்பட ஆரம்பித்து விட்டது என்பது பரணவிதானவின் பிரவேசத்தின் மூலமும், அவன் வெளியிட்ட பொய்த் தகவல்கள் மூலமும் எமக்குப் புரிந்திருக்க வேண்டும். ஆனால் அன்று அது புரியவில்லையே!

ஒரு சதிக்கும்பல், அது எல்லாளன் சமாதியல்ல; துட்டகைமுனுவின் சமாதியே என்ற வரட்டு வாதத்தை அவிழ்த்து விட்ட காரணத்தால், சிங்களவர்கள் அன்றிலிருந்து தலையை நிமிர்த்தி நடக்கத் தொடங்கினர். எம்மையும் அடிமைகளாக எண்ணி நடாத்தத் தொடங்கிவிட்டனர். ஆகவே, வரலாற்றையே மூடி மறைக்க எண்ணும் இந்த அரக்கர்களிடமிருந்து எமது தமிழீழ மண்ணை மீட்டெடுக்க, ஒவ்வொருவரும்எமது தலைவரின் வழியில் இணைந்து போராட முன்வர வேண்டும் என்று.'' அவர் மேலும் கூறினார்.

## பனம் வெல்லம் தயாரிப்பில் வட்டுக்கோட்டைச் சங்கம்

வட்டுக்கோட்டைத் தொகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் பதநீரிலிருந்து பனம் வெல்லம் உற்பத்தியில் சாதனை நிகழ்த்தியுள்ளது. இச் சங்கம் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரை 6000 கிலோ கிராம் நிறையுள்ள பனம் வெல்லத்தை உற்பத்தி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பனம் வெல்லத்தின் ஒரு பகுதியைக் கொள்வனவு செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இச் சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் பனம் வெல்லம் சில்லறை விலையாக ஒரு கிலோ 66 ரூபாவாக விற்கப்பட்டு வருகின்றது என்றும், நல்ல தரமானதாகக் காணப்படும் இப் பனம் வெல்லத்தைப் பெருந்தொகையானவர்கள் வாங்கிச் செல்கின்றனர் என்றும் அறியப்படுகின்றது. (13)

## இலங்கை மன்றக் கல்லூரி நாடகக் கருத்தரங்கு

இலங்கை மன்றக் கல்லூரி நாடகம் பற்றிய கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளது இன்றும் நாளையும் நடைபெறும் இக்கருத்தரங்கை இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு இலங்கை மன்றக் கல்லூரியுடன் இணைந்து நடத்துகின்றது.

நாடக ஆசிரியர்கள், விமர்சகர்கள், நாடகக் கலைஞர்கள், நெறியாளர்கள் ஆகிய முப்பத்தைந்து பேர் இக் கருத்தரங்கில் பங்கு பற்றவுள்ளனர் முதல் நாளன்று ஜேர்மன் குடியரசின் தூதுவர் ஜோர்ச் பிரான்சிஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## தமிழ் நாடு சட்டப்பேரவை ஜூலை முதலாம் தேதி கூடும்

தமிழ்நாடு சட்டபேரவை ஜூலை மாதம் முதலாம் தேதி திங்களன்று கூடவிருக்கிறது. கடைசியாக நடந்த தேர்தலின் பின்னர் புதிதாக இச்சட்டப்பேரவை அமைக்கப்படவுள்ளது.

இது புதிதாக அமைக்கப் படவுள்ள பத்தாவது பேரவையாகும். இந்திரா காங்கிரஸின் மூத்த உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாளை தற்காலிக சபைத் தலைவராக ஆளுநர் பீஷ்மர் நாராயணசிங் நியமனம் செய்துள்ளார்.

புதிதாகப் பதவியேற்க உள்ள உறுப்பினர்களுக்குத் திருமதி பொன்னம்மாள் பதவிப் பிரமாணம் செய்துவைப்பார் என்றும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக டி. வி. வெங்கட்ராமன் நியமிக்கப்பட்டுள்ளாரென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெங்கட்ராமன் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி முன்னணியின் நிர்வாக இயக்குநராகப் பதவிவகித்து வந்தார். இவர் எம். ஜி. இராமச்சந்திரன் முதல் அமைச்சராக இருந்த போது உள்துறைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

தலைமைச் செயலாளராகப் பணியாற்றி வந்த ரீ. வி. அந்தோனி மாநிலத்திட்டக் குழுவின் முழுநேரத் தலைவராக நியமனஞ் செய்யப்பட்டுள்ளார்.

டி. சுந்தரேசன் அவர்கள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து உற்பத்தியாளர் குழுவின் தலைவராக முன்பு பணியாற்றியவர். முதலமைச்சரின் கூட்டுச் செயலாளராகக் கைத்தறி மற்றும் ஜவுளித்துறை இயக்குநர் எம். இராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இன்று கலந்துரையாடல்

பனைவள அபிவிருத்திக் கண்காட்சியும், ஆய்வரங்கும் இம் மாதம் இருபத்தொன்பதாம் முப்பதாம் திகதிகளில் யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது. யாழ் விஞ்ஞான மன்றமும் பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து நடத்தும் இவற்றுக்கான கலந்துரையாடல் ஒன்றும் இன்று வியாழன் பிற்பகல் மூன்று மணிக்கு யாழ் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## வல்லைவெளியில் மரங்கள் விறகிற்காக அழிக்கப்படுகின்றன

வல்லைவெளியில் உள்ள நிழல் மரங்கள் விறகிற்காக வெட்டப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

மிகவும் ஆபத்து நிறைந்த வல்லைவெளியில் பாதுகாப்பிற்காகவும், நிழலுக்காகவும் மரக்கன்றுகள் நாட்டப்படும் இவ் வேளையில் அப்பகுதியில் வளர்ந்துள்ள மரங்கள் விறகிற்காக வெட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (39)

## குடமுழுக்கு விழா

சரித்திரப் பிரசித்திவாய்ந்த மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்பாள் ஆலயக் குடமுழுக்கு விழா யூலை மாதம் நான்காம் திகதி வியாழக்கிழமை காலை பதினொரு மணிக்கு நடைபெறவுள்ளது.

## பிறமொழி நீக்கித் தமிழில் எழுதுவோம்

| வடசொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|
| பாஷை | — | மொழி |
| சிருஷ்டி | — | படைப்பு |
| அஸ்திவாரம் | — | அடிப்படை |
| உற்சவம் | — | திருவிழா |
| பரீட்சை | — | தேர்வு |
| கட்சி | — | பக்கம் |
| சட்டியப்தம் | — | அறுபதாமாண்டு |
| வருடம் | — | ஆண்டு |
| அவஸ்தை | — | துன்பம் |
| சாஸ்திரம் | — | கலை |

(வளரும்)

## சைவ மகாஜனாக் கல்லூரியில் கல்விக் கண்காட்சி

இணுவில் சைவமகாஜனாக் கல்லூரியில் இன்றும் நாளையும் கல்விக்கண்காட்சி ஒன்று நடைபெறுகின்றது. இக்கண்காட்சியில் மாணவர்களினால் உருவாக்கப்பட்ட கட்புல காதனங்களும், வேறு ஆக்கங்களும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாண வரலாற்றோடு தொடர்பான வரலாற்றுச் சான்றுகள் காட்சிக்கு வைக்கப்படுகின்றன.

மருதனார் மடக்கல்விக் கோட்ட அதிகாரி எஸ். தனஞ்செயன் இன்று காலை 9 மணிக்கு இக்கண்காட்சியை ஆரம்பித்து வைக்க உள்ளார். இந்நிகழ்ச்சியில் மக்கள் முன்னணி உறுப்பினர்களும் கலந்து கொள்கின்றார்கள்.

இணுவில் சைவ மகாஜனாக் கல்லூரியும் இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலையும் இணைந்து நடாத்தும் இக்கண்காட்சிக்குரிய பிரவேசம் இலவசம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப-10)

## திபெத்தில் ஹெலி நொருங்கியது

திபெத்தில் ஹெலிக்கொப்ரர் ஒன்று விழுந்துநொருங்கியதால் பலர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சீன இராணுவத்தைச் சேர்ந்த இரண்டு லெப்ரினன்ற் ஜெனரல்கள் உட்பட பத்தொன்பது உயரதிகாரிகள் இவ் விபத்தில் உயிரிழந்தனர். இராணுவக் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோதே இவ் விபத்துநிகழ்ந்ததாகக்ஹொங்கொங் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## றெட்ஸ்ரார் விளையாட்டுக்கழக கரபந்தாட்டப் போட்டிகள்

பாண்டியன் தாழ்வு ''றெட்ஸ்ரார்'' விளையாட்டுக் கழகம் நடாத்தும் ''ஓவர் கேம்'' முறையிலான கரபந்தாட்ட போட்டித் தொடரில் முன் ''றெட்ஸ்ரார்'' விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் ''யெற்லையின்ஸ்'' கழக அணி''றெட்ஸ்ரார் ''கழக'' :'பி'' பிரிவு அணியை 15:8, 6:15 15:9 புள்ளிகள் கணக்கில் தோற்கடித்தது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இன்னொரு ஆட்டத்தில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய கொய்யாத் தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை இரண்டு நேர்செற்றுகளால் 17:14, 15:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் கடும் போட்டியின் பின் தோற்கடித்தது

இப் போட்டிகட்கு தீர்ப்பாளர்களாக கப்ரின் டீ. ஏ. எம். குணசிங்கம், கே. நாகேந்திரன் ஆகியோர் கடமையாற்றினார்கள். (16)

## சிறுவர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

கொக்குவில் கிழக்கு வளர்மதி முன்னேற்றக்கழக மகளிர் பகுதி சிறுவர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறுகளில் பிற்பகல் இரண்டரை மணிக்குக் கழக முன்பாக நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினர்களாக து. வைத்திலிங்கம்,இ. இராஜரத்தினம்,மா. சின்னத்தம்பி, செ.சந்திரசேகராமுதலியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

## தேவஸ்தான மடாலயத்தில் பாலர் பாடசாலை

யாழ் கல்வித்திணைக்களம் புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தா சபை, புலோலி தமிழ் இளைஞர் கழகம், சனசமூக நிலையம் என்பன இணைந்து புற்றளைச் சித்திவிநாயகர் தேவஸ்தான மடாலயத்தில் பாலர் பாடசாலை ஒன்றைத் திறந்துவைத்துள்ளன.

புற்றளைச் சித்திவிநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தா சபைச் செயலாளர் திரு.என். கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இப்பாலர் பாடசாலைத் திறப்பு விழாவிலே புற்றளைச் சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதம குரு பிரம்ம ஸ்ரீ சோ. விஜயரத்தினக் குருக்கள் பாலர் பாடசாலையைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

இப்பாலர் பாடசாலையில் கல்வீபயில்வதற்கு 30 பாலர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குச் சத்துணவுத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஒழுங்குகளும்மேற்கொள்ளப்பட்டுள்ளன

இப்பாலர் பாடசாலைக்கான தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்களைக் கல்வித்திணைக்களம் வழங்கியுள்ளது. 15

## மகா கும்பாபிஷேகம்

சாவகச்சேரி தனங்கிளப்பு அருள்மிகு காரைத்தூ விநாயகர் ஆலய சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் இம் மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது

நொக்கவுட் முறை

## உதைபந்தாட்டப் போட்டி
## சென்மேரிஸ் சாம்பியன்

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட நொக்அவுட் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபொழுது நாவாந்துறை சென்மேரிஸ் அணி அதனை எதிர்த்து மோதிய குருநகர் பாடுமீன் கழக அணியை ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சாம்பியன் ஆனது

தொடக்கமுதல் இறுதிவரை வெகு விறு விறுப்பாய் இருந்த இப்போட்டியில் ஆட்டம் முடிவு பெறுவதற்கு 30 வினாடிகள் இருக்கையில் சென்மேரிஸ் சாதுரியமாக ஒரு கோலைப் போட்டு வெற்றி வாகை சூடியது.

இப்போட்டிக்கு நடுவராக எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளையும் உதவி நடுவர்களாக பீ ஆர். தம்பிநாயகம், எம். பிறான்சிஸ் ஆகியோரும் கடமையாற்றினார்கள்.

யாழ் உதைபந்தாட்ட லீக் தலைவர் திரு எஸ். கணநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். 16, 78

## ஐ. தே. க. தலைவர் கொலை
## வழக்கு விசாரணை ஆரம்பம்

ஐக்கியதேசியக்கட்சித்தலைவர் ஹர்ஸா அபயவர்த்தனா கொலை வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரீ. பி வீரசூரியா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் நான்கு பேர் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முதலாவது எதிரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இரண்டாம் எதிரி சிறையில் இருந்து தப்பியோடிவிட்டதாகவும், ஐந்தாம் எதிரி தப்பியோட முயன்றபோது சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

மூன்றாம், நான்காம் எதிரிகள் மட்டுமே நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு விசாரணை நடைபெறுகிறது. (33)

## வெளிமாவட்டத் தபால்கள்
## இன்று விநியோகம்

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்ட வெளியூர்த் தபால் பொதிகள் நேற்று முன்தினம் யாழ் பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டன.

யாழ் பிரதம தபாலகப் பகுதிக்குரிய தபாற் பொதிகள் இன்று தரம்பிரிக்கப்பட்டு வழமைபோல் விநியோகிக்கப்படும் என்று தபாலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மற்றும் குடா நாட்டுத் தபாலகங்களுக்குரிய தபாற் பொதிகள் வழமை போல் அனுப்பிவைக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். 33

### ஆனையிறவில் ஷெல் வீச்சு

ஆனையிறவிலிருந்து படையினர் நேற்று முன்தினம் 6மணியளவில் கடும் ஷெல் தாக்குதல்களை நடாத்தினர்.

இயக்கச்சி, குறிஞ்சாத்தீவுப்பகுதியினை நோக்கி சுமார் ஒரு மணித்தியாலமாக இத்தாக்குதல் இடம் பெற்றது. 79

## வீடு திரும்பிக்கொண்டிருந்த
## இளம் ஆசிரியை குத்திக்கொலை

இளம்யுவதி ஒருவர் பட்டப் பகலில் குத்திக்கொல்லப்பட்டு அவரது நகைகள் அபகரிக்கப்பட்ட சம்பவம் பளையில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

பளை – தர்மக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியையான செல்வி. கு தர்ஷனா (24) என்பவருக்கே இக்கதி நேர்ந்துள்ளது.

பாடசாலை முடிந்ததும் பிற்பகல் 1 30 மணியளவில் இந்த ஆசிரியை தனது உறவு முறையான சிறுமி ஒருவரையும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இச்சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தர்மக்கேணி மத்திய ஒழுங்கை ஊடாகஇவர்கள்போய்க் கொண்டிருந்த பொழுது மறைந்து இருந்த ஒருவர் ஆசிரியருடன் வந்த சிறுமியை மிரட்டிக் கலைத்தாராம்.

அதனையடுத்துஆசிரியையை அந்தநபர் வயிற்றிலும், கழுத்திலும் கத்தியால் வெட்டியும் குத்தியும் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் இடம்பெற்ற சில நிமிடங்களில் அப்பகுதியால் வந்தவர்கள் யுவதியின் சடலத்தை லொறி மூலம் பளை அரசினர் ஆஸ்பத்திரிக்குக்கொண்டு வந்துசேர்த்தனர்

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் விசாரணை நடத்திவருகின்றனர்(33)

## பாஸ்போட் அலுவலகம் முன்பாக நீண்ட வரிசை

வளைகுடா யுத்தம் முடிந்து மத்திய கிழக்கில் நிலைமை சீராகியதையடுத்து அங்கு இலங்கையருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளதால் கொழும்பில் உள்ள குடியகல்வுகுடிவரவுத் திணைக்களத்தின் முன்பாகக் கடவுச் சீட்டுப் பெறுவதற்காக நீண்ட வரிசை காணப்படுகிறது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெண்கள் அதிகம் செல்வதால் வரிசையில் நிற்போரில் பெண்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். (33)

## விளையாட்டு வினையானது ஒருவர் பலி; இருவர்காயம்

அரியாலைப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து எடுக்கப்பட்ட வெடிக்காத இந்தியஇராணுவத்தின் ஷெல்லுடன் விளையாடிய இளைஞர் அது வெடித்ததால் வயிற்றில் படுகாயமடைந்து மரணமானார்.

சிறிய பென்டோஜ் பற்றரி அளவிலான கறுப்புப்பொருள் ஒன்றினை வீட்டு வளவிற்குள் எடுத்து விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுவர்கள் சில நிமிடத்தின் பின் அது வெடித்ததினால் படுகாயமுற்றனர்

பண்டத்தரிப்பு - வடலியடைப்பில் வசிக்கும் கந்தசாமி பிரதாபன் (8) கந்தசாமி பிரதீபன் (10) என்ற இருசகோதரர்களே இவ்வாறு காயப்பட்டவர்களாவர். (79)

### இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்கக் கூட்டம்

யாழ் மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டம் 28 ஆம் திகதி வெள்ளி பிற்பகல் 2. 30 மணிக்கு சங்கத் தலைவர் எம் எஸ். வின்சன் தலைமையில் யாழ் புனித மரியாள் மகாவித்தியாலய (அடைக்கல மாதா கோவில்) மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இப்பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறவுள்ளது.

யாழ் மாவட்டப் பிராந்திய உள்ளூராட்சி, பிரதேச சபைகளில் அனுமதிபெற்று, அவ்வப் பிரதேச சபைப் பகுதிகளில் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி வியாபாரம் செய்யும் கடை உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் தவறாது இக் கூட்டத்திற்குச் சமுகந்தர வேண்டுமென்று யாழ் மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் க. சி கிருஷ்ணன் அறிவித்துள்ளார். (78, 47)

## செயல் முறைப் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறும்

1989 க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு செயல் முறைப்பரீட்சை இடம் பெறாததால் சிலர் உயர் வகுப்பைத் தொடர்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இப்பரீட்சையின் சங்கீதம், நடனம், மனைப்பொருளியல் செயல்முறைப் பரீட்சை அடுத்த மாதம் இடம்பெறவுள்ளதாகப் பரீட்சை திணைக்களம்அறிவித்துள்ளது

இச்செயல் முறைப் பரீட்சைக்கு மாணவர்கள் தங்களைத் தயார் படுத்திக் கொள்ளுமாறு யாழ கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (74)

### விளையாட்டு போட்டி

யாழ் மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி ப. 2 மணிக்கு மத்திய கல்லூரி மைதானத்தில்நடைபெறவுள்ளது

**எம்பிலிபிட்டியவில்—**
டன் இவர்களுக்குத் தொடர்பு இருந்ததாகவும் இப்பகுதிகளில் இருந்து வந்து பெலியத்தையில் மறைந்து வாழ்ந்து வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (33)

**உணவுக்—**
தலைமை வகித்து உரையாற்றுகையில் தொற்று நோய்கள் மக்கள் மத்தியில் பரவுவதற்கு உணவு தான் காரணம் என்றும், சுகாதார விதிகளுக்கு இணங்கச்சுத்தமானமுறையில் தேநீர்ச் சாலைகள், உணவு விடுதிகள், பேக்கறிகள் செயற்படவேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

சுகாதார விதிகளை அநுசரிக்காத உணவகங்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும்குறிப்பிட்டார்.

தேநீர்க் கடைகள் பலவற்றில் நாள்முழுவதும் பருகிய பேணிகளை ஒரே தண்ணீரிற் கழுவி வருவதைத் தவிர்க்க வேண்டும். தண்ணீரைமாற்றிப் புதிய தண்ணீரில் அவற்றைக் கழுவுவது அவசியம் என்றும் இக்கருத்தரங்கில் சுட்டிக்காட்டப்பட்டது.

சங்கானைப்பட்டினஉபஅலுவலகப் பொறுப்பதிகாரி எஸ். திரவியம், சங்கானை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என் சச்சிதானந்தம் ஆகியோரும் இக்கருத்தரங்கில் உரையாற்றினார்கள். (13)

**எதிர்கட்சிகளின்...**
கட்சி ரீதியான வேறுபாடு கொண்டிருந்தபோதிலும் மத்தியில் உறுதியான ஆட்சி அமைவதன் அவசியத்தை உணர்ந்துள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

**பாதுகாப்பு..**
துணை அமைச்சர் ஒருவரும் நேற்றுப்பதவியேற்றுக்கொண்டனர்.

இதுவரை பிரதமர் நரசிம்மராவே பாதுகாப்பு அமைச்சுக்கும் பொறுப்பாக விருந்தார்.

**கிராம...**
ஒருவரின் பெயரை அதில் இல்லை என்று கூறி உறவினருக்கு 38ஆம் இலக்க உலர் உணவு நிவாரணத்தை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 79

**தமிழகச்...**
தியில் இருந்தே தெரிவானார்.

துறைமுகம் தொகுதியில் வெற்றி பெற்ற கருணாநிதி பதவியை ராஜினாமாச்செய்ததால் அத்தொகுதியும் வெற்றிடமாகியுள்ளது.

இதேவேளை சுயேட்சை வேட்பாளர்கள் இறந்ததினால் நிறுத்திவைக்கப்பட்ட எழும்பூர், முஸ்றி தொகுதிகளிலும் விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது.

**ஏழாலை..**
குப்பிளானில் இருந்து இடம் பெயர்ந்து வசித்து வந்தவர்களான தாமர் செல்லம் என்ற 70 வயது மூதாட்டி, சிவபாதம் சுரேஸ்குமார் (18)புவனராசாகேசவன்(20)ஆகிய மூவருமே படு காயமடைந்தனர்

அப்பகுதியில் செல்வம் என்பவருடைய வீடு உட்பட ஐந்து வீடுகள் சேதமுற்றன. 79

**29 ஆம்...**
களத்திற்கு செல்லும் ஆசிரியர்களுக்கு யாழ் கல்வித் திணைக்களம் விசேட ஒழுங்குகளைச் செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

திருத்த வேலைக்கு செல்லும் ஆசிரியர்கள் 28 ஆம் திகதி பரீட்சை திணைக்களத்திற்கு செல்லல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 74

**போராட்டத்தின்—**
பதை வரலாறுகள் சுட்டிக் காட்டுகின்றன என பி. பி. ஸி தனது செய்தி விமர்சனத்தில் குறிப்பிட்டது.

**தொடர்ந்து...**
பணிப்பாளர் ஆர் சுந்தரலிங்கம் எஸ் வேலாயுதம் தொடர்ந்துக் கோட்டக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும்கடிதத்தைஎடுத்துவந்துள்ளதாகவும், தற் சமயம் கடமையாற்றும் பொ. வீரபத்திரன் யாழ் பிராந்தியக்கல்விப்பணிமனைக்கு மாற்றப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (78)

**சமஷ்டி...**
பட்சத்தில் தமிழர்களுக்கு தமிழ்ஈழம் கொடுக்கப்பட வேண்டும் எனவும் சுப்பிரமணியம்சுவாமி கூறினார். 78


## வேலை வாய்ப்புக்கள்

கீழ்குறிப்பிடும் இடங்களில் அமைய விருக்கும் தும்புத் தொழில் நிலையங்களுக்கு தொழில் அனுபவமுள்ளவர்களும், பயிலவிரும்புபவர்களும்

தென்மராட்சி விடுதலைப் புலிகள் வேலைவாய்ப்பு தொடர்பகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| இடங்கள் | தொழிலின் தன்மை |
|---|---|
| 1. நாவற்குழி தெற்கு | 1. கயிறு திரித்தல் |
| 2. மறவன்புலவு | 2. தும்புத்தடி கட்டுதல் |
| 3. சாவகச்சேரி | 3. ஈக்குத்தடி கட்டுதல் |
| 4. கச்சாய் | 4. தூரிகை வகை செய்தல் |
| 5. கெற்பலி | 5. கால்மிதி பின்னுதல் |
| 6. சரசாலை மத்தி | 6. தேடாக் கயிறு செய்தல் |
| 7. தம்பகாமம் | |

தென்மராட்சி விடுதலைப் புலிகள் தொடர்பகம்
தபால் நிலைய வீதி,
சாவகச்சேரி.

06091


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டசசுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 27. 06. 91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.